உ

ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய நம:

ஸ்ரீ

பக்த ரத்னாவளி

ப்ரார்த்தனை.

கீர்த்தனங்கள், நாமாவளிகள்.

இயற்றியவர்:

க.க. நாகஜி, க. காஸ்ரமணி, புலியூர்.

பிரசுரம்:

...மங்கலம், பட்டுக்கோட்டை.

19[illegible]

T07658
R002H06

உ

ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய நம:

ஸ்ரீ

பக்த ரத்னாவளி

பிரார்த்தனை.

கீர்த்தனங்கள், நாமாவளிகள்.

இயற்றியவர்:

சுகதாஸர், சுகாஸ்ரமம், புலியூர்.

பிரசுரம்:

சத்ஸங்கம், பட்டுக்கோட்டை.

1953.

உ

ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய நம:

ஸ்ரீ

பக்த ரத்னாவளி

பிரார்த்தனை.

கீர்த்தனங்கள், நாமாவளிகள்.

இயற்றியவர்:
சுகதாஸர், புலியூர்.

பிரசுரம்:
சத்ஸங்கம், பட்டுக்கோட்டை.

1953.

நன்றியுரை.

தஞ்சையைச்சேர்ந்த பட்டுக்கோட்டை சத்சங்க ஆத்மீக நிலைய சங்கத்தார் மனமுவந்து அளித்த நன்றியுரை:—

பாரத நாட்டின்கண் தஞ்சையம்பதி நீர்வளம், நிலவளம் பொருந்திச் செழித்து ஓங்கி வளரும் ஓர் நன்னாடாகும். இதில் ஒன்றான பட்டுக்கோட்டை என்னும் ஓர் சிறிய நகரில் நூல் ஆசிரியர், பிரம்ம **ஸ்ரீ சுகதாஸ்** அவர்களால் 1951-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் சத்சங்க ஆத்மீக நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பெற்று இருப்பது பட்டுக்கோட்டை வாசிகளுக்குப் பக்தியும், ஆன்ம வளர்ச்சியும்பெற முக்கிய சாதனமாகும். ஷ சத்சங்கத்தை ஏற்படுத்தியது முதல் அன்பர்களின் அன்பிற்கிசைந்து **ஸ்ரீ சுகதாஸ்** அவர்கள் அடிக்கடி சத்சங்கத்திற்கு வந்து, ஆன்ம வளர்ச்சிபெற பக்தி வேண்டும் என்றும், பக்தி வேண்டுமாயின் சத்சங்கம் வேண்டும் என்றும், சத்சங்கம் வேண்டுமாயின் நல்லோர் உறவு வேண்டும் என்றும், இன்னோரான பொன்மொழிகளையும், பக்திக்குரிய நற்போதனைகளையும் கூறி, சத்சங்கத்தார்களையும், சங்கத்திற்கு வரும் சகோதர, சகோதரிகளையும், பக்திப்பெருக்கெடுக்கச் செய்வதும் **ஸ்ரீ சுகதாஸ்** அவர்கள் பக்திப்பரவசத்தால் அவர் வாயிலாக வெளிக் கிளம்பும் சொற்கள், கீர்த்தனங்களாகவும், நாமாவளிகளாகவும் தோன்றி, எல்லோரையும் மனமுருகிப் பரவச மாக்கி பாடவைப்பதும், எல்லாம் வல்ல "ஸ்ரீ ராதாகிருஷ்ணன்" அருளால் ஏற்பட்டதே அல்லாது வேறெதுவும் சொல்லக்கூடுமோ!

ஸ்ரீ சுகதாஸ் அவர்கள் வாயிலாய் வெளிக் கிளம்பிய பிரார்த்தனைகளான கீர்த்தனைகள், நாமாவளிகள், முதலியவைகள் எல்லோர் நெஞ்சிலும் பக்தி ஊட்டுவதாயும், அந்த பரவசத்தைக்கொண்டு பாடி ஈசனைத் துதிசெய்து ஆனந்திக்க ஓர் சிறு நூலாக ஆக்கி ஆன்மீக அன்பர்கள் எல்லோரும் பாடி ஈசன் அருளை அடையச்செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதற் கிணங்க, அவர் பக்தி ரஸம் ததும்பும் பாக்களை யியற்றி அதற்குப் "பக்த ரத்னவளி" என்னும் நாமமும் சூட்டினர். பக்தி உணர்ச்சி ததும்பும் இச்சிறு நூல் பாடும்போது எங்களுக்கு அன்பும் அமைதியும் இன்பமும் தருகின்றன. இச்சிறு நூலை பக்தி ஆர்வம் உள்ளவர்களும், ஆஸ்திக அன்பர்களும், ஆதரித்துப் பாடி ஆண்டவன் அருளைப்பெற வேண்டும் என்றும், மேலும் மேலும் பக்தி பெருக இச்சிறு நூல் வழி காட்டியாக இருக்கவேண்டும் என்றும் எல்லாம்வல்ல இறைவனை வேண்டுவதோடு நூலாக ஆக்கி அளித்த பிரும்மஸ்ரீ சுகதாஸ் அவர்களுக்கு சத்சங்க ஆத்மீக நிலைய சங்கத்தார்களாகிய நாங்கள் எங்களது அன்பார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்,
தாஸர்கள்,

சத்சங்க ஆத்மீக நிலையம்.
பட்டுக்கோட்டை,
22-2-1953.

(Sd) N. VEERASWAMI IYER,
President.

(Sd) R. SAMBASIVA IYER,
Vice President.

S. RAMACHANDRA SASTRIGAL, B. A., B. L.,
PLEADER,
PATTUKOTTAI.

★

இச்சிறு நூல் ஆன்மீகம் நலிந்து கிடக்கும் இந்நாளில் அது தளிர்த்து தழைத்து ஓங்கி வளர ஒரு உன்னத ஸாதனமாகும். ஆன்ம வளர்ச்சி பெற பக்தி ஒரு முக்கிய சாதனே. ஈசனுடைய நாமாவையோ அவனுடைய லீலைகளையோ கேட்டு எவன் மனம் உருக வில்லையோ, கண்கள் நீர் துளிர்க்க வில்லையோ, மெய் சிலிர்க்கவில்லையோ, அவனுக்கு உபநிடதார்த்தம் எட்டாது என்று ஸ்ரீ பாகவதம் கூறுகிறது. ஈசனுடன் உறவாட அவனுடன் ஒன்றி ஆனந்த்தத்தை அனுபவிக்க பசித்தவன் கவளந்தோறும் களைப்பைத் தீர்த்து திருப்தி எய்வது போல பக்தியினல் உறவாடுபவன் திளைக்காமல் திருப்தி எய்துவான். பகவான் கீதையில் மன்மனுபவமத் பக்தஹ என்றும் பக்த்யா த்வனன் யதாலப்யஹ என்றும் உபதேசிக்கிருர். கர்ம ஞான மார்க்கங்கள் சிரமமானவை. பக்தியே சிறந்தது எளிது. அதிலும் நாமானுஸந்தானம் செய்தல், தோத்தரித்தல், அவன் பணியாற்றல், அவர் அடியார்களுடன் உறவாடல், அவனுக்கு அடிமைப் படல், அவனுக்கே ஆத்மஸமர்ப்பணம் செய்தல், என்ற முறையில் அமைந்த இந்நாலின் கருத்திற்கிசைப்ப அனுதினமும் பாடி ஈசனைத் துதி செய்தால் இந்நூலாசிரியர் கோரியபடி பக்தி பெருகி பரமனின் உறவு கிட்டுமென்பது நிச்சயம். அப்படி எல்லோரும் நூலாசிரியரின் அனுபவத்தை அடைய வேண்டுமென்பது என் தாழ்மையான விண்ணப்பம்.

12—1—53. (Sd) RAMACHANDREN

R. V. RAJAGOPALA IYYAR B. A.,
Retd. Dt. Inspector of L. F. Accts.

"Lalitha" Villa
VISWESWARAPURAM,
BHEEMANNAPET,

Mylapore,
Dated, 7-3-1953.

நாகப்பட்டினம் தாலூகா புலியூரிலிருக்கும் என் நண்பரும் பகவத் பக்தியிலீடுபட்டவருமான ஸ்ரீமான் ராஜாராம அய்யர் அவர்கள் குமாரர் ஸ்ரீ சுகதாஸ் என்ற காரணப் பெயர்கொண்ட ஸ்ரீமான் ஆர். கணேசய்யர் அவர்கள் இயற்றிய "பக்த ரத்னவளி" என்ற கையெழுத்துப் பிரதியைப் பார்த்து மிகுந்த ஸந்தோஷமடைந்தேன். ஷ்டி புஸ்தகம் பக்தியோகத்தினுடைய ஸாரத்தை திரட்டி தெளிவான எளிய நடையில் பாலர்களும், சிறு பெண்களும் சிரமமில்லாமல் புரிந்துகொள்ளும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஸகுண உபாஸனைக்கு மிகுந்த ஸாதனமாயிருக்கும். பகவானின் கருணை விசேஷத்தையும் கீர்த்திப்ரதாபங்களையும் யாவர்க்கும் இனிது விளக்கிஅறிவுறுத்தும் பேரவாவுள்ள ஸ்ரீ சுகதாஸ் அவர்கள், பக்தி பரவசத்தால் இயற்றிய பக்தரத்னவளியைப் படிப்பவர்கள் பகவானுடைய அனுக்ரஹத்துக்கு பாத்ரர்களாக வேண்டும் என்றும், ஸகல விதமான சரேயஸ்ஸையும் அடைய வேண்டுமென்றும் பிரார்த்திக்கிறேன்.

பக்தியை யூட்டும் இன்னும் அநேக புஸ்தகங்கள் எழுதும்படி ஸ்ரீ சுகதாஸுக்கு இறைவன் அருள் புரியுமாறு வேண்டுகின்றேன்.

(Sd) ஆர். வி. ராஜகோபாலய்யர்

உ

ஸ்ரீ

"பக்த ரத்னவளி"

ஸமர்ப்பணம்

சகல ஜீவர்களும் பேரின்பத்தை பக்தி வாயிலாக
அடையும் பொருட்டு எல்லாம் வல்ல

ஸ்ரீ ராதாகிருஷ்ணன்

சரணங்களுக்கு
இச்சிறு நூல்
ஸமர்ப்பணம்.

சுகதாஸ்



ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய நம :

ஸ்ரீ

"பக்த ரத்னாவளி"

முன்னுரை

மனிதன் என்பவன் யார்? எங்கிருந்து உண்டானவன்? எதற்காக உண்டாக்கப்பட்டவன்? செய்யவேண்டிய கடன்மைகள் யாவை? என்பதை ஒவ்வொரு பாமரனும், தனித்தனியே அமைதியுடன் உணர்ந்து சிந்திப்பானாகில் உடலாகிய வீட்டிற்குள் உயிருக்குயிராகிய பரமன் என்று பெயர் கொண்டுள்ள தெய்வீக நாதம் நன்குணர்த்தும். இதைத் தெய்வீக, வழிபாட்டில் ஈடுகொண்டுள்ள ஒவ்வொரு ஸாதகனும் அவனவன் உழைப்பிற்குத் தகுந்தாற்போல் தெரிந்துகொள்ள இயலும். பூர்ண உழைப்புள்ளவன் பூர்ண நிலையையும் அறிந்துகொள்ளக் கூடும். பூர்ண உழைப்பில்லாமல் பூர்ண நிலையை அறிவது என்பது சுலபமானதல்ல. பூர்ண நிலையை அறிந்து அனுபவிக்கும் ஸத்குருவைத் தேடி அடைந்தால் அவர் கடாக்ஷத்திற்கு பாத்திரமாகக் கூடும். ஸத்குருவானவன் தன் நிலையை அறிந்தும், பிறர் நிலையை அறிந்தும், தகுந்தாற்போல் நேர்மையான முறையில் இலகுவாய் நடந்துகொள்வான்.

அடியார்களோ, "ஏன் எனக்கு இந்த ஜென்மம் அளித்தாய்?'' இந்த பாழ் வாழ்வில் வீழ்த்தினாய்?'' இவை நீக்கிப் பெருவாழ்வைக் கொடுத்து அருளவேண்டும் என்று வேண்டுகின்றனர்.

பக்தனே, தான் செய்யும் எவ்வித காரியங்களையும் ஈசனே (தன்னைக்கொண்டு) நடத்துகிறான்

என்று உணர்ந்து அதன் பிரேமையிலேயே அன்புடன் நடக்கிறான். மரப்பாவையைச் சூத்திரக் கயிறு மூலம் ஆட்டும் ஆட்டக்காரன் எப்படியோ அதைப்போல், தான் ஒரு மரப்பாவை யெனவும், தன்னை ஆட்டுபவன் ஈசனே எனவும் உணர்கிறான்.

அனுபூதியோ, நானற்ற நிலையாகி உலகெல்லாம் தன்னுள் அடக்கி அன்பு, அறிவு, ஆனந்தம் இவைகளின் வெள்ளங்கள் ஓரிடத்தில் மோதினது போல் உண்டாகும் உணர்ச்சி நிலையில் இருப்பான். இதுதான் இன்பமயம்.

இவர்கள்போல் எல்லோரும் ஈசனிடம் ஈடுபட்டு, அவனை பக்தி நிறைந்த பாடல்களினால் வாயாரப் பாடி, மனங்களித்து, இறையன்பில் ஈடுபட்டு, அமைதியடைந்து, நித்திய சுகம்பெற வேண்டுமென்பதுதான் தாஸன் விருப்பம். சத்ஸங்கம்:— சத்துக்களான தெய்வீக மணங்கொண்ட அன்பர்கள் நிறைந்த ஒரு கூட்டம் (சங்கம்). இந்தச் சங்கம் தெய்வீக சங்கத்திற்கு ஒப்பாகும். இந்தச் சங்கத்தில் பழகும் ஒவ்வொரு பாமரனும் பரமனருளுக்குப் பாத்திரமாவா னென்பது திண்ணம். இதையறியாத ஒவ்வொரு பாமரனும் பாமரமே. படகு ஓட்டி இல்லாவிடினும், படகை பாமரம் இழுத்துப்போகும். அதற்குக் காரணம் அதிலடிக்கும் காற்று. அதுபோல, பாய்மரம் போலுள்ள மனமானது தீய எண்ணங்களாகிய காற்றடிக்கும்போது படகு போன்ற உடலைப் பலதுறைகளிலும் இழுத்து இழுக்காக்கும். அதற்கு இடங்கொடாமல் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டியது, பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனுடைய கடமையாகும். இந்த சங்கத்தைத்

தழுவும் ஒவ்வொருவனும் படகோட்டியாவன். நீர் இல்லாத இடத்தில் படகு ஓடுமா? சத்சங்கமில்லாத இடத்தில் தன்னைத்தான் ஒழுங்காக ஓட்டமுடியுமா? சிந்தித்துப் பாருங்கள். உணர்வீர்கள்.

தஞ்சையைச் சேர்ந்த பட்டுக்கோட்டை எனப் பெயர் வழங்கும் "வீரமா நகரம்" என்று ஒரு நகர் உள்ளது. இந்த நகரில் பெரிய தெருவில் "ஸ்ரீ கண்ணன் கூடம்" என்று வழங்கி வரும் (மீனாக்ஷிராஜகோபாலய்யர்) இல்லத்தில், சென்ற 1951-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் சத்சங்கம் (ஆத்மீக நிலையம்) அன்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க தாசனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது முதல் மேற்படி சத்சங்கத்தில், பக்தவாசிகளும், சத்சங்க அன்பர்களும் நாம சங்கீர்த்தனங்கள், பஜனைகள் செய்தும், புராணங்கள் படித்தும், பக்தியுடன் நடத்திக்கொண்டு, ஆத்மசுத்தியும் விவேகமும் படிப்படியாக (வளர்ச்சி) பெற்று வருகிறார்கள். மேன்மேலும் அவர்களுக்குத் திடசித்தமும், வைராக்கிய பக்தியும் ஏற்பட அருளுமாறு எல்லாம் வல்ல ஈசனை தாஸன் அடி பணிந்து வேண்டிக்கொண்டு, இதுபோல் எல்லா இடங்களிலும் சத்சங்கங்கள் ஏற்படுத்தி, தெய்வீக வாழ்க்கையில் ஈடுபட்டு இன்புற வேணுமாய் எல்லோரையும் தாஸன் கேட்டுக்கொள்ளுகின்றனன்.

தாஸன் கற்றறியாக் கசடன். அனுபவமில்லாத அனாதை. நாதன் தாஸனுக்குப் பரமன். தாஸன் உள் ஒளிமயமான பரமன், ஒலியின் மூலமாய் (தாஸன் பிரார்த்தனைகளை) கீர்த்தனங்கள் நாமாவளிகள் துதிப்பாடல்கள் முதலியவைகளாக அடங்

கிய "பக்த ரத்னவளி" என்னும் நூலாக வெளி யாக்கிய தன்மையை என்னென்று சொல்வது. எல்லாம் "அவனன்றி ஓரணுவும் அசையாது, அவன் செயலாலாவதன்றி என் செயலாலாவ தொன்றிலையே" இது தாஸன் சத்தியவாக்கு. இச் சிறு நூல் சொற்களை, குழந்தைகளின் மழலைச் சொற்களாக எண்ணி (குழந்தைகளை அபிமா னித்து அன்புசெலுத்தி சந்தோஷப்படுவதுபோல்) தாஸனை குழந்தைபோல் பாவித்து யாவரும் இந்த "பக்த ரத்னவளி" என்னும் நூலில் குற்றம் பாராது, குணம் பூண்டு மனப்பூர்வமாய் ஆதரிக்க வேண்டுகின்றனன்.

இச்சிறு நூலை மிகுந்த அன்புடன் சங்கீதத் துறையில் சரிபார்த்து உதவி புரிந்த பட்டுக் கோட்டை சங்கீதவித்வான் ஸ்ரீமான் **S P. ராஜ கோபாலய்யர்** அவர்களுக்குத் தாஸன் மனப்பூர்வ மான அன்பைத் தெரிவிக்கின்றனன்.

இந்த "பக்த ரத்னவளி" என்னும் நூல் அச்சாவதற்கு வேண்டிய பொருளுதவி முழுவதை யும் பட்டுக்கோட்டை, சத்சங்க ஆத்மீகநிலைய கைங் கர்யமாகப் பாவித்துச்செய்த தஞ்சைஜில்லா பட்டுக் கோட்டை, ஸ்ரீமான் **ரா. வாசுதேவ அய்யர்** அவர் களுக்கும் அவர் குடும்பத்தினர்களுக்கும் சர்வ சக்தி வாய்ந்த ஈசன் சகலவித க்ஷேமங்களையும் வருஷிக்க தாஸன் மனப்பூர்வமாய் பிரார்த்திக்கின்றனன்.

இப்படிக்கு,

சுகதாஸ்.

ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய நம:

ஸ்ரீ

"பக்த ரத்னாவளி"

முதல் பாகம்

★

பிரார்த்தனை.

கீர்த்தனங்களும், நாமாவளிகளும்.

ஸ்ரீ குரு தியானம்

குருர் பிரும்மா குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேஸ்வர:
குருர் ஸாக்ஷாத் பரப்பிரும்ம
தஸ்மை ஸ்ரீ குருவே நம:

அழுந்தோறும் அணைக்கு மன்னை
அறிவிலா தோடி யாடி
விழுந்தோரும் எடுக்கு மப்பன்
விளையாடும் போது தோழன்
தொழுந்தோறும் கார்க்கும் தெய்வம்
சொந்தமாய் எடுப்போர் கெல்லாங்
குழந்தை இப்படி உலாவுமென்
குருநாதன் வாழி! வாழி!!

குரு கீர்த்தனம்

ஈவர குஜூ சின்ன தீம் சலாதா—மெட்டு.

ராகம்-சங்கராபரணம், தாளம்-ஆதி.

பல்லவி

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியே சத்குருவே
சிவானந்தம் அளிப்பாயே (ஸ்ரீ த)

அனுபல்லவி

சின்முத்ரை கொண்ட சின்மூர்த்தியே நான்
சித்தி முக்தி வேண்டி வந்தேன் குருவே (ஸ்ரீ த)

சரணம்

நானோர் உன் அடிமை நீ என் குருவே
நான் நாடும் ஞானம் ஆத்ம வித்யா மோனம்
ஜெகமாயை மாள நீ என்னை ஆள
சுகதாஸன் போற்றும் துதிபாடல் யேற்று (ஸ்ரீ த)

நாமாவளி

ஸத்குரு ஜெயகுரு ஸ்ச்சிதானந்த குரு
பரமகுரு பரமகுரு பரமதயாள பரமகுரு.

ஸ்ரீ கணபதி தியானம்

கைலாச பதி முதல் செல்வனே
கன்னியம்மையின் களிர்முக பால
கைவடிவேல் சிவக்கொழுந்தின் அண்ணனே
கை ஐந்துடைய கடவுளே
ஐய்யனை வலம் வந்தரும்கனி பெற்ற
ஐயனே ஆனந்த வடிவனே வா
ஐயக்கடல் நீக்கு மண்ணலே
இன்பக் கருணையாய் நின்ற தேவனே.

கணபதியே கணபதியே ஓம் காரப் பொருளே
கணபதியே
கணபதியே கணபதியே உமையின் பாலகா ,,
கணபதியே கணபதியே ஆதிமூலத்தரசே ,,
கணபதியே கணபதியே அடியார்க் கெளிய ,,
கணபதியே கணபதியே வேலனுக்குதவிய ,,

கணபதியே கணபதியே வேதத்துட்பொருளே
கணபதியே
கணபதியே கணபதியே மோதகப்ரியனே ,,
கணபதியே கணபதியே மூஞ்சூரு வாகனனே,,
கணபதியே கணபதியே யானை முகத்தோனே,,
கணபதியே கணபதியே யாவுமானாய் நீயே ,,

ஸ்ரீ கணேசர் கீர்த்தனம்

சலமேலரா-சாகேதராமா-மெட்டு.

ராகம்-மார்க்க ஹிந்தோளம், தாளம்-ஆதி.

பல்லவி

கருணை செய்வாய் கஜவதன (கரு)

அனுபல்லவி

பார்வதி குமாரா பவநாசன் பாலா
பக்தர்கள் சகாயா அன்பர்கள் சகாயா (கரு)

சரணம்

கந்தனை நீல வள்ளி மணாளனாய்
களிப்புடன் செய்ய துணைவனாய் நின்றாய்
அருட்புகழிசைபாட துணை நாடினேனே
சுகதாஸன் ஆக்க அருள்பாலிப்பாயே (கரு)

நாமாவளி

ஏகதந்தா ஏரம்பா கௌரிசேயா விக்னேசா
தும்பிக்கைதேவா துணைபுரிவாய் துதிக்க எனக்கு
அருள் புரிவாய்.

ஸ்ரீ முருகன் தியானம்

சரவணப் பொய்கையிலே அவதரித்த பெருமாளே
சாம்பசிவனிளைய குமரா சிங்கார செல்வனே வா

இஷ்டமுடன் தாயிடம் வேல்பெற்று சூர் பேற
—றுத்தாய்
ஸஷ்டியிற் பணிந்தவரை காப்பவனே கந்தனே.

ஸ்ரீ முருகன் கீர்த்தனங்கள்

சாதரமுகருஹா-மெட்டு.

ராகம்-தோடி, தாளம்-ஆதி.

பல்லவி

வா என்முன் குஹா அருள்புரிய (வா)

அனுபல்லவி

வந்தேனே வாடி உன் சேவடி நாடி
செந்தேனே ஆடி மயிலுடன் கூடி (வா)

சரணம்

ஏகந்தனே கண்யனே நீதனே நாதனே
பாலனென்றனை பற்றின பழவினை
வேதனை சோதனை தாளேனே நான் இனி
வேலனே லோலனே சுகதாஸ நேசனே. (வா)

---

2. ராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி

ஆடுது ஆடுது ஆடுது மாமயில்
கூ கூ எனக் கூவி வாவென்றழைக்குது (ஆ)

அனுபல்லவி

வள்ளி தெய்வானை வல மிட மாட
கதிர் வடிவேலன் நடுவினி லாட (ஆ)

சரணம்

சரவண பவனை சத்குரு நாதனை
சச்சிதானந்தனை சாந்தஸ்வருபனை

சாதுக்களுடன் கூடி காக்ஷியும் காண
சுகதாஸனுடன் கூடி வாரீர் பாரீர் (ஆ)

கோரஸ்

3. ஸ்ரீ ஹரிமாதவ தேவா தேவா—மெட்டு.

ராகம்-பியாகடை, தாளம்-ஆதி

பல்லவி

சரவண பவகுஹ குருபரா உன்
சரணம் நான் சேவிக்க வேலுடன் வருவீர் (ச)

அனுபல்லவி

மாமாயை துன்பத்தை விரட்டி யடிக்கவே
மாமயில் மீதேறி துரிதமாய் வருவீர் (ச)

சரணம்

என் இரு வினையை களைந்து யெறியவே
நான் உம்மை வேண்டினேன் விரைந்து நீர்
வருவீர் (ச)
ஸம்ஸார கடலை கணமே நான் தாண்ட நீர்
சச்சிதானந்த நாமம் வேலவா அருள்வீர்
வேதம் நான் ஓதவில்லை வேதாந்தம் கற்கவில்லை
அடியார் கூட்டத்துள் கூடவே செய்வீர்
வள்ளி தெய்வானையுடன் காக்ஷியும் காணவே
வேண்டும் சுகதாஸனுக்கு இன்பமாய்
தோன்றுவீர் (ச)

---

4. இனியாகிலும் மனமே-மெட்டு.

ராகம்-கர்நாடக தேவகாந்தாரி, தாளம்-ஆதி.

பல்லவி

எந்நாளில் நான் வருவேன் வேலனே
என் வினை மாளவே எனை நீ ஆளவே (எ)

அனுபல்லவி

இத்தனை நாள் உன்னை சிந்தனை செய்தறியேன்
இன்னமுமெனக்கு இன்னலும் வேண்டுமோ (எ)

சரணம்

உலகமுள்ள தெல்லாம் உரிமையாயில்லை அய்யா
உறவினர் யாவர்க்கெல்லாம் சுமையாளனு
கினேன் நான்
சுமையை சுமக்க இனி சற்றுமே சக்தியல்லேன்
சுகதாஸ அடிமை உன்பால் இறைஞ்சு
கின்றேனே (எ)

---

5. ராகம்-புன்னுகவராளி, தாளம்-ஆதி.

பல்லவி

கந்தனுக்கோர் காவடி நாம் கட்டுவோமே
அன்பால்
கட்டி அதை தோளில் வைத்தாடுவோமே (க)

அனுபல்லவி

திருப்புகழ் ஆனந்தமாய் பாடுவோமே அன்பால்
திருநாமம் கூறி கரங் கூப்புவோமே (க)

சரணம்

குதித்தாடுவோமே நாம் கூடுவோமே
குமரனுக்கு அலங்காரம் செய்வோமே
கந்தனை சிந்தனை செய்துணர்வோமே
வந்தனை வழிபாடு செய்வோமே (க)

---

6. மனமே நீ ஈசன் நாமத்தை மெட்டு.

ராகம்-ஹுந்தலாவராளி, தாளம்-ஆதி.

பல்லவி

முருகா நின் உள்ளம் இளகாததா எனே
உள்ளத்தில் வைத்து உணராததா (மு)

அநுபல்லவி

அன்பு வள்ளிதனை ஆட்க்கொள்ள வந்தனே
அன்பு உள்ளந்தனை அருள்கோவி லாக்கினே (மு)

சரணம்

பக்தர்கள் பக்கத்தில் பரமனாய் ஆடும் நீ
சுகதாஸ பாலன்முன் ஆடியே வந்திட (மு)

---

7. யாரோ இவர் யாரோ-மெட்டு

ராகம்-பைரவி, தாளம்-ஆதி.

பல்லவி

வாரும் கண் பாரும் துயர்தீர அருள் தாரும்
—வேலவரே (வா)

அநுபல்லவி

அன்றும் இன்றும் என்றும் உம்மை எண்ணி
னேனே
குன்றுதோறும் ஆடும் நீர் என்முன் (வா)

சரணம்

சூர்ய காந்தனே உன் ஒளியாலே என்னை
ஆர்வம் கொண்டு நீர் அருளாலே
எந்தன் முகவாட்டந்தனை நீக்கிடவே
உந்தன் சுகதாஸன் முகம் பாரும் முருகா (வா)

---

8. நீ அருள் புரியவேண்டும்-மெட்டு.

ராகம்-கீரவாணி, தாளம்-மிஸ்ர சாபு.

பல்லவி

பிறவா வரம் வேண்டும் வேலவனே
இறவா வரம் வேண்டும் வேலவா (பி)

அநுபல்லவி

இகமே சுகமென இல்லமே மெய்யென
இன்பம்போல் துன்பம் கொண்டேன் இனி
வேண்டேன் (பி)

சரணம்

வருவாய் மா மயிலில் புரிவாய் பேரருள்
தருவாய் பேரின்பம் அளிப்பாய் நித்யானந்தம்
பிள்ளை பெண்டிர் மனை மாய வாழ்வில் சுழலும்
சுகதாஸன்மேல் பாசம் நேசம் முருகா வைப்
பாய் (பி)

9. ஏமைய்யராமா-மெட்டு.

ராகம்-கல்யாணி, தாளம்-திருபுடை.

பல்லவி

ஏனய்யா முருகா இன்னமும் உனக்கு
என்மேல்
வர்மமா இதுமர்மமா அய்யா (ஏன)

அநுபல்லவி

பிரும்மாவைப் ரணவமந்த்ர தாத்பர்யம்
கேட்ட குஹா
பரமேசனுக்குப்ரணவ உபதேசம் செய்த
அய்யா (ஏன)

சரணம்

வேண்டி வேண்டி அண்டியே உனைதொழுது
தொழுதேனைய்யா
என்னை நீர் பாராதது தர்மமா
தியானமும் கானமும் தினமும் நான் செய்து
பாடி
ஞானபழம்வேண்டும் சுகதாஸனுக் களிக்க
வில்லை அய்யா (ஏனை)

---

10. தூக்கிய திருவடிதுணையென நம்பினேன்-மெட்டு.
ராகம்-சங்கராபரணம், தாளம்-ஆதி.

பல்லவி

இதுவே தருணமைய்யா நின் புகழ் பாடவே
அருள் புரிவீர் மாதவா மாதவா (இது)

அனுபல்லவி

சங்கீத கலைதனையே சிறிதேனும் கற்றி
லையே
சாஹித்யம் இன்னதென்று அரியாதபாலன்
நானே (இது)

சரணம்

தியாகராஜ கபீர்தாஸ ராமதாஸ துகாராம்
புரந்தரதாஸமீரா சக்குபாய் நின்னைப்பாட
நீர் அருள் புரிந்து பக்தி தந்து நீர் கார்த்தீ
ரன்றோ
சுகதாஸன் முகம்பார்க்க கண்ணெடுத்துப்
பாருமையா (இது)

---

11. வாசுதேவயணி-மெட்டு.

ராகம்-கல்யாணி, தாளம்-ஆதி.

பல்லவி

நெஞ்சமே வஞ்சக மாயையை நீ வெல்ல
தஞ்சமே என குஹனை நீ கூடு (நெ)

அனுபல்லவி

பொல்லாத எல்லா எண்ணமே உனை
வெல்லாத நிலையாகி குணமாகி (நெ)

சரணம்

இதய குகை இன்பம் கொண்டு வாசியாகி
உதய கதிர்போல் குஹனே ஒளியாகி
இருள் ஓட அருள் கூட துணையாகி
சுகதாஸனை ஆளும் ஆதிபரன் (நெ)

---

12. ஸோபில்லுஸப்தஸ்வர-மெட்டு.

ராகம்-ஜகன்மோஹினி, தாளம்-ரூபகம்.

பல்லவி

எக்காலும் உன்னை நான் மறவேனே
முருகனே குஹனே (எக்)

அனுபல்லவி

வடிவேலா வள்ளி மணாளா வா என் முன்
வேலவா (எக்)

சரணம்

ஊனுயிரும் ஒன்றாய் என்னுள்
உத்தமனாய் ஓங்கி நிற்பாய்
என்னுள் உபதேசம் செய்வாய்
ஈசன் மகனே சுகதாஸன் இனி (எக்)

13. நல்ல மருந்து-மெட்டு.

ராகம்-தேவமனோஹரி, தாளம்-ஆதி.

பல்லவி

கண்டேன் கண்டேன் காக்ஷி கந்தன்
கனவில் கோல மயில் மீதிலாட (க)

சரணம்

1 ஆனந்த மானதோர் சோலை அதிலொரு
ஆடவன் கூட மங்கையர் இரண்டு
கோவணங்கொண்டதோர் ஆண்டி அவன்
கோடி சூர்யன் போல் நின்றான் காந்தன் (க)

2 வீரவேல் கொண்டதோர் கையில் எந்தன்
வீர வேதனைகளை வீழ்த்திட்டான் வேலன்
என்னென்று சொல்வேன் அவன் மஹிமை
வேறு எவர்க்கென் றுரைப்பேன்
சுகதாஸன் (க)

நாமாவளி

சரவண பவா ஷண்முகா
குறிஞ்சி வேந்தா குருபரா.

---

14. லெக்ஷ்மி உன்னை நம்பினேன்-மெட்டு.

ராகம்-சங்கராபரணம், தாளம்-ரூபகம்

பல்லவி

பித்தனாகி நின்றேனே முருகா உன்மேல் (பி)

அனுபல்லவி

எத்தனையோ பிறவி எடுத்தெடுத்தே இளைத்
தேன்
அத்தனை பிறவிகளில் உன்னை மறந்தேனே (பி)

சரணம்

இந்த பிறவியாகில் பித்தனை கைவிடாமல்
சொந்த முறையாக்கி எந்தனை புனிதனுக்கி
பக்தி எந்தனுக்களித்து எந்தன்மேல் அன்பு
வைத்து
முக்தி அருள சுகதாஸன் பணிந்தேனே (பி)

---

15. மருகேலரா-மெட்டு.

ராகம்-ஜயந்தஸ்ரீ — பல்லவி — தாளம்-ஆதி.

மயிலேறிவா வடிவேலவா (ம)

அனுபல்லவி

ஆறுமுகவேலா வேறு யார் எனக்கு
ஆடி என் முன் வந்து அருள் நீ புரிவாய் (ம)

சரணம்

வள்ளி தினைபுனம் காத்த சமயமே
மெள்ள இதுதானே சமயமென்று நீயே
அவளருகில் சென்று வேங்கையாகி நின்று
அன்புகொண்ட விருத்தா சுகதாசன் முன்னே (ம)

---

16. மனமே நீ ஈசன் நாமத்தை-மெட்டு.

ராகம்-குந்தலவராளி, — தாளம்-ஆதி.

பல்லவி

முருகா என்முன் நீ ஆடிவந்து
அருள நின்மனம் எண்ணுதா (மு)

சரணம்

நம்பிமகள் வள்ளி இன்புற மணங்கொள்ள
அன்பு வள்ளி மகிழ நின்னை அவள் புகழ
விருத்தனுய் வந்தனை வேங்கையாய் நின்றனை
சங்கைகள் தீர்த்தனை சுகதாசன் நின் புகழ்பாட (மு)

ஸ்ரீ பரமசிவன் தியானம்

கைலாச கிரிதனில் சந்திர ப்ரபையுடன்
கங்கையை ஜடாமுடியில் தரித்து
புலித்தோலுடையும் மான் மழுவுடன்
நாகமும் உருத்திராக்ஷமுமணிந்து
வெண்ணீரு பூண்டு ஆலகாலத்தால்
கண்டம் கருத்த கருணையனே
திரிசூலம் கையிற் கொண்டவனே அன்பு
உமைக்குடலில் பாதியீந்தவனே
கந்தக் குமரனை அவனண்ணனுடன்
அழகாய் யிருபுரங் கொண்டவனே
தேவ தாஸிகள் நடன மாடிட
நந்திதேவர் முதல் ஆடி மகிழ்ந்திட
காக்ஷி கொடுக்கும் பரஞ்ஜோதியே
சிவகாமி மகிழும் நாயகனே வா
சாக்ஷிபோய் ஸர்வமும் தானய் நின்ற
சதாசிவமே சரணம் சரணம்.

ஸ்ரீ பரமசிவன் கீர்த்தனங்கள்

ராகம்-கல்யாணி, தாளம்-ஆதி.

பல்லவி

பரமேசனே பரமானந்தனே
பொன்னடி பணிந்தேன் பவநாசனே (ப)

அனுபல்லவி

நாதாந்தனே நயனத்ரயனே
நாககங்கணனே நாரிபாகனே (ப)

சரணம்

முன் செய்த குற்றம் குறைதனை தள்ளி
அடியேனில் உள்ள அந்தகாரம் நீக்கி

அன்பு உன் பேரருள் அன்புடன் அளித்து
அமரவாழ்வு சுக தாஸனுக்களிக்க (ப)

---

2. இந்த வரம் தருவாய்-மெட்டு.

ராகம்-கரகரப்ரியா, தாளம்-ஆதி.

பல்லவி

சற்றும் தயவில்லையா ஏழைபால்
கடும் சினங்கொள்ளா தருள்தர சிவனே (ச)

அனுபல்லவி

பணிந்து என் மனம் கனிந்து கசிந்து
தெளிந்து உனதருள் அறியேனே அய்யனே (ச)

சரணம்

வளர்ந்த நாள்முதலாய் வீணுயலைந்து
அயர்ந்த நாளாக்கி நான் வீணளாய் ஆக்கி
மாயப்ரபஞ்ச வாழ்விலமிழ்ந்து
மகிழ்ந்து சுகதாஸன் நெகிழ்ந்தேனே சிவனே (ச)

---

3. எப்படி பாடினரோ-மெட்டு.

ராகம்-கர்நாடக தேவகாந்தாரி, தாளம்-ஆதி.

பல்லவி

ஆனந்தனே பாரு உன்னுள்
ஆனந்தநடமிடும் சச்சிதானந்தனே (ஆ)

அனுபல்லவி

ஈசனும் நேசனும் தாய்தந்தை ஆனவனும்
தாஸனுள் உள்ளோனும் அருள் சுடர் அருள்
அன்பனே (ஆ)

சரணம்

இதுதான் என் தெய்வம் அதுதான் உன்
தெய்வம்
இதுபோன்ற வீண்வாதம் வீண் பிடிவாதம்
பக்தி ஞானம்கொண்டு தியானம் பயின்று பாரு
யுக்தி வாதமே இல்லை சுகதாஸன் சொல் நாடு (ஆ)

நாமாவளி

அர்த்தநாரீசனே அற்புதனே ஆயிர நாமனே
ஆகமனே

ஸ்ரீ நடராஜர் கீர்த்தனம்

சீதாபதே நாமனஸ்ஸுனு-மெட்டு.

ராகம்-கமாஸ், தாளம்-ஆதி.

பல்லவி

சபாபதி எனையாளும்பதி சச்சிதானந்த
சேவடிகதி (ச)

அனுபல்லவி

குஞ்சிதபாதன் குதித்தாடும் கூத்தன்
கல் கிலு கில் கில் தத்திமிதிம்தோன் (ச)

சரணம்

நடமாடி சபை தனில்சதா நடம்
ஆடும் சபாநாதன் ஆனந்ததாண்டவன்
புலிப்பாதர் பதஞ்சலி பணிய ஆட்டம்
புரியும் நடராஜன் சுகதாஸன் நாதன் (ச)

நாமாவளி

நடராஜா நடராஜா நர்த்தன சுந்தர நடராஜா
சச்சிதானந்த நடராஜா சித் சபேசா சிவராஜா

ஸ்ரீ தியாகராஜர் பாடல்

ஸ்ருங்கார ஸ்ருதி செய்குவாய்-மெட்டு.

ராகம்-பூரிகல்யாணி, தாளம்-ஆதி.

பல்லவி

உன்னையே நம்பிவந்தேனே தியாகேசனே
நான்
உன்னையே தினமே தனித்து துதித்து (உன்)

அனுபல்லவி

தீராத் தீவினை தீர்த்திடும் ராஜனே
வாரா நல்லருள் தந்திடும் ஈசனே (உன்)

சரணம்

கமலாலயம் என்னும் ஆலயத்தடாகமும்
கமலாம்பாள் தேவிஇட பாகமும் கொண்டது
போலும்
திருச்சன்னதியினெதிர் திருத்தேர்
கொண்டது போலும்
திருவடிதனில் சுக தாஸனை கொண்டிடுவாயே (உன்)

நாமாவளி

திருவாரூரா தியாகேசா
திரு அருள் புரிவாய் கைலாசா

ஸ்ரீ அம்பாள் தியானம்

அகண்ட பரவெளியாய் அதிலே ஓர் ஒளியாய்
ஜெகத்தெலாம் தானாய் அரனயனரி முதலாய்
சகல தேவர் முதலாய் மற்றும்
சகலவுலகங்களாய்

ஜெகம் நீர் கால் தீயாய்
அதில் பல ஜீவங்களாய்
பறக்கவும் இருக்கவும் செய்
துலகைத் தாங்கிடும் நீ
அனைத்திலும் நின்றெம்மையே
ஆண்டனைத் தருள் புரிவாய்
பராசக்தியே ஸ்ரீமாதே
பூரணி ஸ்ரீ லலிதா
பக்தி தந்தெமை யணைப்பாய்
பராசக்தி என் தாயே

ஸ்ரீ அம்பாள் கீர்த்தனங்கள்

ப்ருஷ்திமுகுந்தேதி-மெட்டு.

ராகம்-குறிஞ்சி, தாளம்-ஆதி.

பல்லவி

தேவியே நீ என் ஆவி அம்மையே
தாயே நீ வந்தெனை ஆள்வாயே (தே)

சரணங்கள்

(1) ஏங்கியே நான் உன்னை நாடி வந்தேனே
தாங்கியே நீ எனக் கருள் புரிவாயே (தே)

(2) அனைத்திலும் உயிர்க்குயிர் ஆனவளாகினை
கனவிலும் நினவிலும் காக்க நீ வருவாயே (தே)

(3) தாயைப் பிரிந்த கன்று போலவே நான்
கதறி அலறுவதும் நீதியோ நன்
முறையோ (தே)

---

2. ஸங்கீத ஞானமு-மெட்டு.

ராகம்-தன்யாசி, தாளம்-ஆதி.

பல்லவி

அம்மா என்முகம் பாரம்மா ஆளம்மா
அடியேன் உன் சேயன்றோ (அ)

அனுபல்லவி

எண் கை கொண்டும் புன்னகை கொண்டும்
புலிமீதில் யேறிக்கொண்டும் ஆளும் அம்மா (அ)

சரணம்

நாலது கரந்தனில் சக்ரவாள் வில்லுமாலை
நாலது கரந்தனில் சங்கு கதை பத்ம சூலம்
குங்கும வர்ண நிற மேனியும் உடையாளே
பொங்கும் கருணை சுக தாஸனுக்கருள் அம்மா (அ)

---

3. இன்னும் பராமுகமேனோ-மெட்டு.

ராகம்-பியாகடை, தாளம்-ரூபகம்.

பல்லவி

அம்பா மதுரை மீனாக்ஷி
அன்புடன் ஆதரிப்பாய் எனை (அ)

அனுபல்லவி

மலையத்வஜன் புதல்வியாகி
மதுராபுரி ஆளும் மீனாக்ஷி (ஆ)

சரணம்

மாதா நலமருளல் வேண்டும்
ஈசனை மணந்த உன் பாதம் பூஜித்தேன்
இன் சொல்லால் நான் னின்னைப் பாட
சுகதாஸன் நாடி வாடி வந்தேன் (அ)

---

4. இன்னமும் தாமதமேன்-மெட்டு.

ராகம்-தேவமனோஹரி, தாளம்-ஆதி.

பல்லவி

அம்மா நீ அருள் புரிவாய் மாரி (அ)

அனுபல்லவி

பால பருவம்தனில் அன்பாய் வளர்த்தாய்
பலகால் நான் உன்னை பக்தியே செய்ய (அ)

சரணம்

அகிலமெலாம் ஆளும் ஆதியே நீயே
எங்கிலும் உன் மாயை என்றறிந்தேனே
இங்கிலும் அங்கிலும் நீ தானன்றோ
மங்காத பக்திகொண்டு சுகதாஸன் துதிக்க (அ)

---

5. நாத தனுமனிசம்-மெட்டு.

ராகம்-சித்தரஞ்சனி, தாளம்-ஆதி.

பல்லவி

காஞ்சி காமாக்ஷியே அருள்பெற
கெஞ்சியே அஞ்சியே வந்தேன் தாயே (கா)

அனுபல்லவி

காமகோடியே காமரூபியே
காயத்ரி தாயே கல்யாணி தாயே (கா)

சரணம்

பிரும்ம வித்யாரூ பிணியே பகவதி
பரம்பிரும்மஸ்வரூபிணியே என் தாயே
ராஜராஜேஸ்வரி அகிலாண்டேஸ்வரி
சுகதாஸன் ஒன்றும் அறியாசேயே (கா)

---

6. பஜனை செயவே ஓமனஸா-மெட்டு.

ராகம்-கேதாரம், தாளம்-ரூபகம்.

பல்லவி

வடிவழகியே நல்லருள் புரிவாய்
வறுமை துயரை யகற்றிடவே (வ)

அனுபல்லவி

அவனியெங்கும் அமைதி காண
அன்பு பொங்கும் இன்பம் காண (வ)

சரணம்

எல்லையிலே என்னைக் காத்து
இன்ப வரம் தந்திடவே
கன்னியாகுறிச்சி கன்னிகையே
சுகதாஸன் வாடி நின்றேன் நாடி (வ)

7. நீயே மருத்திடில்-மெட்டு.

ராகம்-சாருகேசி, தாளம்-ஆதி.

பல்லவி

இன்னும் சோதனை ஏனோ தாயே
இன்பம் துன்பம் ஏனோ எனக்கு (இ)

அனுபல்லவி

தில்லை எல்லை கோயில்கொண்ட
தில்லை மாநகர் காளியே தாயே (இ)

சரணம்

தில்லை தாயே இல்லை உன்போல்
எல்லை இல்லா அன்புவைக்க
வந்தேன் உன்னிடம் அருளைப்பெற நான்
என்தாயே சுக தாஸனுக் களிக்க (இ)

நாமாவளி

ஓம்காரி சங்கரி கங்காளி கௌமாரி
பீதாம்பரி பூரணி கபாலி காரணி

ஸ்ரீ சரஸ்வதி தியானம்

தினமுன்னை நினைந்து தொழுது
திட்முடன் பணிந்தேன் நாவினில் வா
மனங்குளிரப் பாடி யாட
மாதா என் இஷ்டம் பூர்த்தி செய்வாய்
ஞானக்கலா நிதியம்பா
நால்விதக் கவிகளை தாஸனுக்கீவா
தினமெனைக் காக்கும் நல்மொழி
தேவி சரஸ்வதி சரணம் சரணம்

ஸ்ரீ சரஸ்வதி கீர்த்தனங்கள்

1. மாருபல்க குணவே மீரா-மெட்டு.

ராகம்-ஸ்ரீ ரஞ்சனி, தாளம்-ஆதி.

பல்லவி

சரஸ்வதியே ஸகல கலை அளிப்பாய்
ஸகலகலா வல்லியே (ச)

அநுபல்லவி

நான்முகன் நாயகியே நாமகளே
நான் இசை இயக்க (ச)

சரணம்

நாதகீத தாயே நல்வீணை மீட்டி வருவாயே
நற்குண
நாத பிர்ம்ம நிலை அளிப்பாயே சுகதாஸனுக்கு (ச)

---

2. ஜானகிரமண-மெட்டு.

ராகம்-காபி, தாளம்-ஆதி.

பல்லவி

சரஸ்வதி தேவியே ஸரஸமுடனே
ஸகலகலை அளிப்பாய் கலைமகளே (ச)

அநுபல்லவி

நாலுவேத ஆறு சாஸ்த்ர காயத்ரீயே
நாதகானலோல ஸ்ரீ நாமாதுவே (ச)

சரணம்

ராகதாள இன்னிசை மீட்டுமோர் வீணை
ராஜஸ தீர்க்க கீத ஸங்கீத
சுத்தசாஹித்ய நித்ய ஸங்கீர்த்தன
கலைவாணியே சுகதாஸனுக்கு (ச)

ஸரஸஸாமதள-மெட்டு.

ராகம்-காபிநாருயணி, தாளம்-ஆதி.

பல்லவி

அருள் புரிவாய் அம்மா உன்னை நம்பிவந்தேன்
அன்புடனே நீலா யதாக்ஷியே (அ)

அநுபல்லவி

காயாரோகணன் மகிழ் நாயகியே
காணாத உன் முகம் காண காக்ஷி அளித்து (அ)

சரணம்

பாரோர்க்கெல்லாம் தாயாய் வானோர்க்கெல்
—லாம் தாயாய்
பரவி ஆளும் தாயே என்னை யாளும் நீயே
நாகை நகர்தனிலே அமர்ந்த எந்தன் தாயே
நாடிய உன் சுக தாசன் முன் வருவாய் (அ)

நாமாவளி

சதுர்முக நாயகி ஸரஸ்வதி ஸகலகலாநிதி
கலைவாணி
வீணாபாணி வேதஸ்வரூபி வாக்கருள் காரணி
கல்யாணி

ஸ்ரீ மக விஷ்ணு தியானம்

க்ஷீராப்திசயனா ஆதிசேஷ சயனா
பள்ளிகொண்ட தேவா பால கோபாலா
நீலமேகஸ்யாமா நித்தியானந்தா
லக்ஷ்மீநாயகா நரஹரி ரூபா
சங்கு சக்ரதர சங்கடஹாரி
துவாரகாபுரி வாசா ஈசா
அஷ்ட பஞ்சாக்ஷர நாமா தேவா
ஆனந்த அற்புத அமிருதஸ்வரூபா
துஷ்ட நிக்ரஹா தூயா நேயா
இஷ்ட வரதா ஸ்ரீ மகாவிஷ்ணு
அயோத்தி தனில் வந்தவதரித்தோனே
அண்ணல் தசரதன் புத்திர ராமா

ஸ்ரீ மகாவிஷ்ணு கீர்த்தனங்கள்

1. கருணாலய நிதியே-மெட்டு.

ராகம்-இந்தோளம், தாளம்-ஆதி.

பல்லவி

லெக்ஷ்மி தேவி பதியே உன் பாதம்
ஓடிவந்தேன் நீ கெதியே (லெ)

அனுபல்லவி

ஹிரண்யாசூரனை கிழித்து வதம்செய்து
ப்ரகலாத பக்தனை காத்து ரக்ஷித்த (லெ)

சரணம்

வெங்கிட நாரண பாகவதப்ரியா
பரம தயாளா கருடாத்திரி வாசா
ஸ்வர்ன வனம் ஆளும் நரசிம்மமூர்த்தியே
சுகதாஸன் அடைக்கலம் புகுந்தேனைய்யனே (லெ)

---

2. அபிமானமென் நடுகல்குரா-மெட்டு.

ராகம்-விவர்த்தனி, தாளம்-ஆதி

பல்லவி

பள்ளி கொண்டீரே தில்லையம்பத்தில்
பரந்தாமா நீர் காக்ஷியும் தந்தீரே (ப)

அனுபல்லவி

தில்லை நடேசன் உன் எல்லையில் ஆட
தில்லையில் தேவர் உன் திருவடி நாட (ப)

சரணம்

தசாவதாரம் எடுத்து காத்து
தாசருக்கெல்லாம் திருவுரு காட்சி
அளித்து நீர் களித்து அருள் புரிந்த நீர்
சுகதாஸ அடிமையை ஆண்டருள்வீரே (ப)

---

3. ரகுவரனன்னு-மெட்டு.

ராகம்-பந்துவராளி, தாளம்-ஆதி.

பல்லவி

மனோகரமாதவா வந்தேனடிமை (ம)

அனுபல்லவி

நாரணனே உன் அருளையே நாடியே (ம)

சரணம்

மகிழ்ந்தாடிடவே நீ மனத்துளே வாராய்
மனம் கசிந்துருகும் சுகதாஸன் முகம் பாராய் (ம)

நாமாவளி

பாற்கடல் பள்ளி கொண்டவனே
பாரினில் விளங்கும் மாதவனே
கபட நாடக நாரணனே
கமல நாபனே கார்வண்ணனே

ஸ்ரீ ராமர் தியானம்

ராமா! ரா என்ற ஞானத்தேனும் மா என்ற பாலும் கலந்து உண்டு, ராம ராமா என்று உள் தித்திக்க, உடல் தித்திக்க, உலகம் தித்திக்க பேரின்பக்களியில் நான் அற்று வீழ்ந்து, எங்கும் இப் பேரொளி சூழ அருள் என் சீதாராமனே!

ஸ்ரீ ராமர் கீர்த்தனங்கள்

1. எந்தவேடுகோ-மெட்டு.

ராகம்-சரஸ்வதிமனோஹரி, தாளம்-ஆதி.

பல்லவி

இந்த நேரமோ எந்த நேரமோ
நீ வந்தருள நான் வெகுதூரமோ (இ)

அனுபல்லவி

உனக்கு நானோர் தாளா பாரமோ
எனக்கருள் அளிக்க ஓ ராம ராமா (இ)

சரணம்

எது புண்யமோ எது பாபமோ
அது எண்ணி ராமா நடந்தரியேனே
சீதாராமா உன் காக்ஷி காண ஏழை
சுகதாஸன் நேரம் இதுவோ இல்லையோ (இ)

2. சிவன் வருவார் துணை-மெட்டு.

ராகம்-தர்பார், தாளம்-ஆதி.

பல்லவி

ராமா உன்னிடம் வந்தேன் அன்னை
சீதையுடன் காக்ஷி அளித்தருள்வாய் (ரா)

அனுபல்லவி

துஷ்ட நிக்ரஹம் செய்து சிஷ்ட பரிபாலனம்
செய்து
பாரினில் பரமனாய் விளங்கிடும் ராகவா (ரா)

சரணம்

ராமா நீ கைவிட்டாலும் அன்னை எனை கை
விடாளே
அன்னை எனை சுமந்து அன்புடன் அமுதம்
களித்தளித்து
ராமா உன்னிடம் சலுகை சொல்வாள்
—உனக்கு என்மேல்
கிருபை வரவே சுகதாஸன் தஞ்சமென்று (ரா)

நாமாவளி

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே கோவிந்த ஹரே கோபாலா ஹரே
—கிருஷ்ண ஹரே ஹரே

ஸ்ரீ கண்ணன் தியானம்

கார்மேகவண்ணனாய் கோபியர்கள் நேசனாய் கோகுலத்திலகனாகி, கோவிந்த கோபனாய் கோவர்த்தன தாரியாய் கோபால பாலனாகி, தேவகி தனயனாய் தேவாதி தேவனாய் தெய்வத்திருமாலு மாகி, வசுதேவ மைந்தனாய் வரத ப்ரதாபனாய், விமலனாய் விஷ்ணுவாகி, யதுகுலத்திலகனாய் யசோத பாலனாய் யாவுமாயணுவுமாகி, கீதோப தேசனாய் கிருஷ்ணவதாரனாய் கிருபாகடாக்ஷனாகி, நந்த கோப பாலனாய் நீலமேக வர்ணனாய் நித்யானந்த புருஷனாகி, பண்டரிநாதனாய் பரம தயாளனாய் பரமனாய் புண்யனாகி, நின்ற நீ அடியேனை ஏனென்று ஒரு வார்த்தை கேட்டு அருள் புரிவாயே, அச்சுதா!

ஸ்ரீ கிருஷ்ணன் கீர்த்தனங்கள்

1. ராகம்-சிந்துபைரவி, தாளம்-ஆதி.

பல்லவி

கண்ணனை நினைந்தால் கலிதீரும் முகில்
வண்ணனை தொழுதால் களை தீரும் (க)

அநுபல்லவி

ப்ருந்தா வனம்தனில் பூங்குழலூதிடும்
ப்ருந்தாவனேஸ்வர பூரணனை (க)

சரணம்

கோபிய கோபால கோகுலம் வளர்ந்த
கபடநாடகனை கார்மேக வண்ணனை
ஆயர்பாடி ஆயனை ஆதிபராபரனை
அநுதினமும் சுக தாஸன் பணிந்திடும் (க)

---

2. ராரமாயின்டிதாக-மெட்டு.

ராகம்-சாவேரி, தாளம்-ஆதி.

பல்லவி

நவநீத கிருஷ்ண வாராய்
யதுகுல திலகா வந்தருள் புரிவாய் (ந)

அனுபல்லவி

ராதா காந்தா கோபேந்திரா கோவிந்தா
உகாந்த நாதா சதானந்தா (ந)

சரணம்

நல்வினை தீவினை தெரிந்திலனே நான்
நாடினேன் உன்னை நாட்டம் நீ வைத்து
என் உள்ளம் அறிந்து நீ பேரருள் அளிக்க
சுகதாஸன் சூட்டும் பாமாலை ஏற்று (ந)

---

3. அலையாதே பேய் நெஞ்சமே-மெட்டு.

ராகம்-சிந்துபைரவி, தாளம்-ஆதி.

பல்லவி

வருவாயே என் கண்ணனே குழலூதி அருள்
தருவாயே மணிவண்ணனே (வ)

அனுபல்லவி

கோகுல கோபிமார்கள் வியாகுலம் கொண்டு
—உன்னை
கோபாலா என்றால் நீ வருவாயே (வ)

சரணம்

கார்மேக வண்ணனே காக்கவே வருவாயே
யார் என் முகம் பார்க்க நீயன்றி வேறில்லையே

பஞ்ச பாண்டவர்தனை அனுதினம் ஆண்
—டாயே
தஞ்சமென்று வரும் சுக தாஸனை ஆள்வாயே (வ)

ஹிமஹிரிதனயே-மெட்டு.

ராகம்-சுத்ததன்யாசி, தாளம்-ஆதி.

பல்லவி

ஸ்ரீஹரி நாதனை பஜித்திடுவாய் மனமே
ஸ்ரீதர கோவிந்த கேசவ (ஸ்ரீ)

அனுபல்லவி

கானமிர்தரஸ முரளீதர
ஞானமிர்தரஸ ஞான பண்டித (ஸ்ரீ)

சரணம்

மாயாவதார மாதவனைக் காண
மாய வாழ்வினில் வீண் ஆசையை
அகற்றிட இனி போற்றிட துதித்திட
ஆற்றலுடனே நீ சுகதாஸனுடன் (ஸ்ரீ)

---

5. வைஷ்ணவஜனதோ-மெட்டு.

ராகம்-சிந்துபைரவி, தாளம்-ஆதி.

பல்லவி

ராதையாம் கண்ணனும் கேட்டதுண்டோ
ராதைக்கு கண்ணன் ஜீவனன்றோ (ரா)

அனுபல்லவி

ராதை என்னும் கோபி ஜீவாத்மா
கண்ணனென்றும் பகவான் பரமாத்மா (ரா)

சரணம்

பக்தனும் பகவானும் ஒன்றுபோலவே
ராதா கண்ணன் ஒன்றென்று சொல்வாய்

பக்தன் நினைவில் பறந்தோடி வந்து
சுகதாஸ அடிமையை அன்புடன்கொண்ட (ரா)

மருவோரதி-மெட்டு.

ராகம்-ஷண்முகப்ரியா, தாளம்-ஆதி.

பல்லவி

காதலாகினேன் நான் கண்ணா என் மனம்
கனிந்துருகி வந்தேன் கருணை வதனம் காண (கா)

அனுபல்லவி

சத்தியபாமா ராதா ருக்மணி சமேதா
சத்வகுணசீலா தத்வஞான பாலா (கா)

சரணம்

வாமனவதாரம் எடுத்தோரடி மண்ணில்
மற்றொரு அடியும் வானில் மருவோரடியும்
மகாபலியின் சிரத்தில் வைத்த பொன்னடி
—யின்மேல்
மகிழ்ந்துருகும் சுக தாஸனை ஏழை (கா)

நந்தகுமாரா-மெட்டு

ராகம்-நாட்டை, தாளம்-ஆதி.

பல்லவி

பாடிப்பணிவோம் ஆடி மகிழ்வோம்
தேடியே மாதவன் பொன்னடி கூடி (பா)

அனுபல்லவி

யாதவ மாதவ தேவஸ்வரூபனை
கேசவ கோவிந்த கோகுலபாலனை (பா)

சரணம்

தேவகி வசுதேவர் குலத்தில் பிறந்து
தேடியே யசோதை நந்தகோபனிடம்
சென்று தான்வளர்ந்து லீலைகள் புரிந்து
அருள்தனை அளித்தவன் சுகதாஸன் மகிழ்
மாதவனுடன் (பா)

நாமாவளி

கோகுல கோவிந்தா கோபால பாலா
கோபால ஹரே கோவிந்தவரதா

நெஞ்சிற்குபதேசம்-மெட்டு.

ராகம்-ராகமாலிகை, தாளம்-ஆதி.

செஞ்சுருட்டி

பக்தியில் பயில சத் சங்கமே நாடு
சங்கமே தஞ்சமென நெஞ்சமே நாடு (ப)

புன்னாகவராளி

புவிதனில் திகழும் உயர்வும் தாழ்வும்
புகழுமிகழும் பாசமும் போக்கும் (ப)

சிந்துபைரவி

தேகம் சந்தேகமே மாய்ந்திடும் தேகமே.
சுகதாஸ பாலன் பால் வாழ்ந்திடும் நெஞ்சமே (ப)

மனதிற்குபதேசம்.

ராகம்-சங்கராபரணம், தாளம்-ஆதி.

பல்லவி

பஜனை செய்வாய் மனமே தினமே (ப)

அனுபல்லவி

அங்கு மிங்கு மெங்கும் ஓடியாடிவாடாமல்
ஆனந்த ஆயிர நாமனை (ப)

சரணம்

அல்லும் பகலும் அல்லலும் இன்னலும்
ஆகி அலுத்து களைத்து இளைத்தாய்
ஓடும் மனமே ஒரு மனப்பட்டு
கூடு உன் சுக தாஸனுடன் (ப)

சகலகலாவாணியே-மெட்டு.

ராகம்-கேதாரம், தாளம்-ஆதி.

பல்லவி

உலகம் கண்டு மயங்காதே மனமே இனி
உத்தமனைக் காண தயங்காதே (உ)

அனுபல்லவி

சுற்றிச் சுற்றியே பாரு பற்றுதல் போகா
மாயை
சற்றுமே விடாதுன்னை முழுமூட மனமே (உ)

சரணம்

ஆசைக்கோர் அளவில்லை அதுவெல்லாம்
வீண் தொல்லை
பாசம் கொள்ளாதே அதில் கொஞ்சமும்
உண்மை யில்லை
உன் திரு நாயகனை உலகெல்லாம் ஆள்பவனை
உணர்ந்து வணங்குவாய் சுகதாஸன் நேச
மனமே (உ)

ஜகஜ்ஜனனி-மெட்டு.

ராகம்-ரவிசூர்யகாந்தாரி, தாளம்-ஆதி.

பல்லவி

ஆத்ம சாந்தி நீ அடைவாய் மனமே (ஆ)

அநுபல்லவி

பத்ம நாபனை பாண்டவர் நேசனை
பதமலர் நீ பணிந்து மகிழ்ந்து (ஆ)

சரணம்

போதும் போதும் உன் ஓட்டமும் ஆட்டமும்
வஞ்சமும் பிடிவாதமும்
ஏதும் போதும் உனக்கினி வேறுவேண்டாம்
உன் சுகதாஸன் இன்சொல் கேட்டு (ஆ)

ஸர்வம்ப்ரும்ம மயம்-மெட்டு.

ராகம்-சங்கராபரணம், தாளம்-ஆதி.

எங்கும் இன்பமயம் நெஞ்சே
எங்கும் இறைவன் மயம் நெஞ்சே (எங்)

எண்ணிலடங்கா ஜென்மமெடுத்தாய்
ஏன் இனி ஜென்மம் இதில் இன்பமில்லை (எங்)

உயிராகி நின்றவன் ஊராகி நின்றவன்
வெளியாகி நின்றவன் உள்ளாகி நின்றவன் (எங்)

இறையாகி நின்றவன் அன்பாகி நின்றவன்
நீயாகி நின்றவன் சுகதாஸனுள் நின்றவன் (எங்)

அருள் புரிவாய்-மெட்டு.

ராகம்-ஹம்சத்வனி, தாளம்- ஆதி.

பல்லவி

ஐயம் தீர்ப்பாய் ஐயப்பனே
அன்பனுக்கன்பனே அனந்தையின் மகனே (ஐ)

அனுபல்லவி

அன்னையும் தந்தையும் ஆனவனே
அனுதரக்ஷகனே ஆசையகற்பவனே (ஐ)

சரணம்

இருமுடி சுமந்து வந்துனை சேவிக்க
இருமுடி பிரியனே இருமூர்த்தி மகனே
இறைவியின் மகனே இளநீர்ப் பிரியனே
சபரிவாசனே சுகதாஸன் முகம் பாராய் (ஐ)

ஆடும் சிதம்பரமே-மெட்டு.

ராகம்-பெஹாக், தாளம்-ஆதி.

பல்லவி

தூது நீ போய்வாராய் ஆடி அழகாய்
எனதுள்ளம் குறைசொல்ல மயிலே மாத
—வனிடம் (தூ)

சரணங்கள்

வருவேன் வருவேன் என்று அனுதினமும்
சொல்லி
பொறுக்க பொறுக்க வைத்து அலைய வைப்
—பதை சொல்ல (தூ)

அனந்த சயனனைப் ஆனந்தம்கொண்டு
ஆதிசேஷன்பால் பாற்கடல் கொண்டவனி
—டம் (தூ)

யாதொன்றும் அறியாததுபோல் அயர்ந்த
பரமனிடம்
இனி சுகதாஸனை சோதிக்க வேண்டாமென (தூ)

ஸ்ரீ ஆஞ்சநேயர் கீர்த்தனம்

மதிஞமுஜேமப ஜரிதரே-மெட்டு.

ராகம்-ஸயந்தவி, தாளம்-ஆதி.

பல்லவி

ஆஞ்சநேயரே அருள் புரிவீரே (ஆ)

அனுபல்லவி

ரெகு ராமச்சந்திர பக்தி பூரண
ஜெய ராமச்சந்திர தூதகாரண (ஆ)

சரணம்

சீதாதேவி சோகம் தீர்த்துவைக்க ராம
நாதன் கணையாழி கொண்டு கடல் கடந்து
அசோக வனம் ஓடி சோகம் தீர்த்தீர்
அன்பு நீர் வைத்து சுகதாஸன் சோகம்
தீர்த்து (ஆ)

சுபம்.

ஸ்ரீ

"பக்த ரத்னவளி"

முதல் பாகம்

முற்றிற்று.

சுபம்.

★

உ

ஓம் ஸ்ரீ கிருஷ்ணாய நம :

ஸ்ரீ

"பக்த ரத்னாவளி"

இரண்டாம் பாகம்

★

நாமாவளி-பிரார்த்தனை

ஸ்ரீ குரு

சத்குரு ஜெயகுரு சச்சிதானந்தா
சச்சிதானந்தா சதாசிவேந்திரா
சத்குரு ஜெயகுரு குருகுஹானந்தா
சச்சிதானந்தா பக்திதந்தாள்வாய்

ஸ்ரீ கணபதி

கணபதியே கணபதியே என்பதி வாராய் ஜகத்பதியே
கணபதியே கணபதியே நின்னருள் தாராய் ஜகத்பதியே

ஸ்ரீ முருகன்

வா முருகா திருமால் மருகா மயிலழகா வா வேல் முருகா
வா முருகா வடிவேல் முருகா வேல் முருகா வா வேல் அழகா

தணிகாசலனே வருவாய் குஹனே குமா குருபரனே சிவ
—சண்முகனே
சரவணபவனே வருவாய் பரனே சஷ்டிவரதனே ஆண்டருள்
—தேவனே

ஐங்கரன் துணைகொண்டு வள்ளியை மணம் புரிந்த
பரமசிவன் இளங்குமர பரிபூரணா
தாயாரிடம் வேல்கொண்டு சூரனை வதம் செய்து
தூயருள்ளக் கோவில் நின்ற குமரேசா
புள்ளி மயிலேறிக்கொண்டு பாமாலை அணிந்துகொண்டு
வள்ளி தெய்வானை மகிழ் மணவாளா
சிவயோக நிலைகொண்டு பிரணவோபதேசம் செய்த
ஓம் நமசிவாயத்தின் தத்துவம் நீயே.

அருணகிரிக் குகந்தவனே முருகனே வா ஷண்முகா
அருளொளி ஒளிக்க மயில் ஆடி வா நீ ஷண்முகா
அசுரர்குல மழித்தவனே அப்பனே வா ஷண்முகா
அடியேனுள் செழிக்க மயில் ஆடி வா நீ ஷண்முகா

ஆதியந்த மற்றவனே அய்யனே வா ஷண்முகா
ஆதரவளிக்க மயில் ஆடி வா நீ ஷண்முகா
ஆறுபடை ஆண்டவனே அழகனே வா ஷண்முகா
ஆடியெனை யணைக்கமயில் ஆடி வா நீ ஷண்முகா

இடும்பனை யழித்தவனே இன்பனே வா ஷண்முகா
இன்பநிலை அளிக்கமயில் ஆடி வா நீ ஷண்முகா
ஈராறு கையுளனே ஈசனே வா ஷண்முகா
ஈண்டருளளிக்க மயில் ஆடி வா நீ ஷண்முகா

உற்றவுறு வானவனே உத்தமனே வா ஷண்முகா
உயர்ந்தபதமளிக்க மயில் ஆடி வா நீ ஷண்முகா
ஊமைக்கருள் புரிந்தவனே கந்தனே வா ஷண்முகா
ஊனில் ஊறிசிலிர்க்கமயில் ஆடி வா நீ ஷண்முகா

எளியோனை யேற்பவனே அன்பனே வா ஷண்முகா
எனில் உனைபார்க்கமயில் ஆடி வா நீ ஷண்முகா
ஏழை தனைக்காற்பவனே ஏகனே வா ஷண்முகா
ஏற்க எனைஏறுமயில் ஆடி வா நீ ஷண்முகா

ஐங்கரனுக் கிளையவனே ஐயனே வா ஷண்முகா
ஐந்தெழுத் தருளமயில் ஆடி வா நீ ஷண்முகா
ஒன்றாகி நின்றவனே நாதனே வா ஷண்முகா
ஒளியெனுளே ஒளிக்கமயில் ஆடி வா நீ ஷண்முகா

ஓங்காரமானவனே ஆத்மனே வா ஷண்முகா
ஓம் பொருளருள மயில் ஆடி வா நீ ஷண்முகா
ஔவைக்கருள் புரிந்தவனே புனிதனே வா ஷண்முகா
ஔவைப் பொருளருள மயில் ஆடி வா நீ ஷண்முகா

கந்தா கடம்பா கதிர்வேல் முருகா
கருணை புரிவாய் கருணா கரனே
அருவாய் உருவாய் வருவாய் முருகா
எனை யாண்டருள்வாய் தணிகாசலனே

ஆவினன் குடியா ஆடும் மயிலா
அருள் தனைத்தருவாய் அருள்மய நாதா
வருவாய் அன்பாய் வருவாய் வேலா
எனை யாண்டருள்வாய் தணிகாசலனே

திருப்பரங் கிரியா திருமால் மருகா
தயைநீ புரிவாய் தனித் தயாநிதியே
வருவாய் குருவாய் வருவாய் முருகா
எனை யாண்டருள்வாய் தணிகாசலனே

குன்னக் குடியா குமர குருபரா
கவலை தீர்ப்பாய் கருணா நிதியே
வருவாய் பொருளாய் வருவாய் பரனே
எனை யாண்டருள்வாய் தணிகாசலனே

செந்தூர் வேலா சேவல் கொடியா
சித்தி அளிப்பாய் சின்மய தேஜா
வருவாய் நிறைவாய் வருவாய் குகனே
எனை யாண்டருள்வாய் தணிகாசலனே

சரவண நாதா சண்முக வடிவா
சாந்தி அளிப்பாய் சாந்த சொரூபா
வருவாய் ஒளியாய் வருவாய் தேவா
எனை யாண்டருள்வாய் தணிகாசலனே.

தேவ குமரா தேவர்க் கதிபா
திருவாக் கருள்வாய் திருப்புகழன்பா

வருவாய் வடிவாய் வருவாய் வரதா
எனை யாண்டருள்வாய் தணிகாசலனே

முத்தொழில் முருகா முக்திக்கு முதல்வா
மருளை அறுப்பாய் மாயன் மருகா
வருவாய் அழகாய் வருவாய் அழகா
எனை யாண்டருள்வாய் தணிகாசலனே

சுப்ரம்மண்யா சூர சம்ஹாரா
சிவபத மளிப்பாய் சிவசக்தி ரூபா
வருவாய் பதியாய் வருவாய் முருகா
எனை யாண்டருள்வாய் தணிகாசலனே

மயில்மீதில் வந்து மகிழ்ந்து நீ ஆடிட
மயிலான நீலனும் தோகை விரித்திட
இளங்கதிரழகனும் கீழ்திசை வந்திட
இன்பமாயவனும் தன் ஒளிதனை வீசிட
வானவர் முதலோர் கண்டு மகிழ்ந்திட
வாழ்த்தி வணங்கி கை கூப்பி பணிந்திட
பாமர மக்களும் விரைந்து விழித்திட
பாமாலை உனக்கு நான் பாடியே சூட்டிட
வினையை அழிக்கவே உன்னை நான் வேண்டிட
வேல்தனை தாங்கியே வேகமாய் வந்திட
அமைதி நான் நாடியே அடியேன் நான் கும்பிட
ஆறுமுகமாய் வந்து அருளை அளித்திட
வள்ளி தெய்வானை நீ நேசமாயணைத்திட
வந்தென்னை ஆட்கொண்டு ஆனந்தமளிக்கிட
புகழ்மாலை மார்பனே புண்ணிய புருஷனே
பாமாலை சூட்டினேன் பார்வதி மைந்தனே

ஸ்ரீ பரமசிவன்

அர்த்தநாரீசனே அற்புதனே ஐமுகனே கங்கா
தரனே
ஆனந்தமயனே ஆரணனே ஆயிர நாமனே
ஆகமனே
இடபாரூடனே ஈஸ்வரனே உகாந்த காலனே
உமேசனே
ஏகாம்பரனே எண்குணனே ஜடாதரனே
பரிபூரணனே
காளிமர்தனனே காமனாசனே கபாலதரனே
கைலாசனே
கைலாச மந்திரகேதரனே தற்பரனே
பரமானந்தனே
சதுர்புஜனே சசிசேகரனே சிற்பரனே
சிவ சங்கரனே
சௌந்திரனே செந்தீவண்ணனே அடியேனை
நீ ஆண்டருள்வாய்

ஸ்ரீ விஷ்ணு

ஆதி அமுதாய் வருவாயே கிருஷ்ணா
ஆனந்த அமுதம் தருவாயே
கவலைகளெல்லாம் தீர்ப்பாயே கிருஷ்ணா
கருணை வெள்ளம் புரிவாயே
பிறப்பு இறப்பு களைவாயே கிருஷ்ணா
புனிதனா யென்னை கொள்வாயே
செய்த பிழையை பொறுப்பாயே கிருஷ்ணா
சாந்தியை எனக் களிப்பாயே
மாயைப்பேயை அழிப்பாயே கிருஷ்ணா
சீர்பாதம் தனிலென்னை சேர்ப்பாயே

ஹரே ராமா ஹரே கிருஷ்ண ராமகிருஷ்ண
ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே ராமா கிருஷ்ண ராம
ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண ராதாகிருஷ்ண
ஹரே ஹரே
ஹரே ராமா ஹரே ராமா ஸீதாராமா ஹரே ஹரே

ரகுகுல திலகா கோதண்டராமா ரகுபதி ராகவா
ஹரே ஹரே
யதுகுல திலகா கோகுலபாலா கோபால கிருஷ்ண
ஹரே ஹரே

ரகுபதி ராகவ ராஜாராம் யதுகுல திலக
கிருஷ்ணராம்
தசரத நந்தன ராஜாராம் நந்தகோபால
கிருஷ்ணராம்

ஸ்ரீ ஐயப்பன்

ஐயப்பா என் இருவினை அகற்பாய்
பொன்னப்பா நின் சரண மய்யப்பா
ஐயப்பா என் பிறப் பிறப் பொழிப்பாய்
ஹரிஹரப்பா நின் சரண மய்யப்பா

ஐயப்பா எனை ஆண்டருள் புரிவாய்
மெய்யப்பா நின் சரண மய்யப்பா
ஐயப்பா என் ஐயம் தவிற்பாய்
ஹரிஹரப்பா நின் சரண மய்யப்பா

ஐயப்பா என் இன்னல் அகற்பாய்
பொன்னப்பா நின் சரண மய்யப்பா
ஐயப்பா நின் பொற்பாதம் தருவாய்
ஹரிஹரப்பா நின் சரணம் மய்யப்பா

ஐயப்பா என் ஹரிஹரப்பா நின்
மைந்தன் சரணம் சபரியப்பா
ஐபப்பா நான் நின்னுடன் கூடி
இன்புடன் வாழ அருளப்பா

ராம தூதா ஆத்ம நாதா ராம பக்த மாருதி
ராம ராம ராம ராம ராமசந்திர மாருதி
ஆஞ்சநேயா அஞ்சாவீரா அன்பர் நேசா மாருதி
வாயுபுத்திரா வரமெனக்கு தந்தருள்வாய் மாருதி
சூர வீரா வேதனைகள் தாங்கவில்லை மாருதி
தூயர் நேசா தொல்லைகளை துரத்திவிடு மாருதி
வன வாசா வேண்டினேன் நான் உன் அன்பை மாருதி
ராமதாஸா ராம நாமா எனக்கருள்வாய் மாருதி

மங்களம்!

ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்
ஜெயமங்களம் சுப ஜெயமங்களம்

சுபம்.

கிடைக்குமிடம்.

★

உ

ஸ்ரீ

"பக்த ரத்னவளி"

(இலவச வெளியீடு)

★

அன்புடையீர்!

அடியில் கண்ட விலாசத்திற்கு ஒறணு தபால் ஸ்டாம்பு அனுப்பி இந் நூலை புக் போஸ்டில் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம் :- **சுகதாஸர்**
சுகாஸ்ரமம், புலியூர் Po.
சிக்கல் (வழி)
தஞ்சாவூர் ஜில்லா S. Ry.

சக்ரவர்த்தி அச்சகம், கீழ்வேளூர்.